# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 03, 2024

Weekly E-paper • August 03, 2024


# புதிய வெளிச்சமாய்... திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்

சுப. வீரபாண்டியன்



## இயக்கச் செய்திகள்

## ‘வயநாடு அரசியல் அல்ல, துயரம்!

தலையங்கம்

## தமிழ்நாடு முதலமைச்சரிடம் பாடம் படிக்க வேண்டும்!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஆகஸ்ட் 03, 2024 Weekly E-paper ● August 03, 2024


## புதிய வெளிச்சமாய்... திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்

சுப. வீரபாண்டியன்

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் இணையலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்திருக்கிறது - இது சொல்!

2024 ஆகஸ்ட் 1 ஆம் நாள் -

"திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்" என்று ஒரு புதிய அமைப்பு உருவாகி உள்ளது! - இது செயல்!





தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு என்று பல்வேறு சங்கங்கள் உள்ளன. எனினும் அவை அவர்களின் தொழில், கல்வி, உரிமை சார்ந்த சங்கங்கள். இப்போது தொடங்கப்பட்டு இருப்பதோ, சமத்துவம், சமூக நீதி, பெண்ணுரிமை போன்ற திராவிடக் கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய சங்கம்!

ஓரிரு மாதங்களுக்கு முன்பு, சென்னைக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் சிலர், வழக்கறிஞர் அருள் மொழியைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது! பிறகு அது மெதுவாக உருப்பெற்று, வலுப்பெற்று இன்று சங்கமாக ஆகியிருக்கிறது!

சென்னை, திருச்சி, சேலம், திருவாரூர், மன்னார்குடி, ராசிபுரம், திருவண்ணாமலை முதலிய ஊர்கள் பலவற்றிலிருந்து 84 ஆசிரியர்கள் சென்னையில் 1-8-2024 அன்று மாலை கூடி முடிவெடுக்கத் திட்டமிட்டு இருந்திருக்கின்றனர். அவர்களுள், ஏறத்தாழ 20 பெண் பேராசிரியர்கள் உள்பட, 62 பேர் அந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் கூடியிருந்தனர்.

அந்தக் கூட்டத்திற்குக் கருத்துரைஞர்களாக, வழக்கறிஞர் அருள்மொழி, மருத்துவர், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், நான் என மூவரும் அழைக்கப்பட்டு இருந்தோம். ஏறத்தாழ 3 மணி நேரம் நடைபெற்ற அந்தக் கூட்டத்தின் இறுதியில், புதிய அமைப்புக்கு, "திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்" என்று பெயரிடப்பட்டு, 9 பேர் கொண்ட ஓர் ஒருங்கிணைப்புக் குழுவும் உருவாக்கப்பட்டது!

தமிழ்நாடு எங்கும் உள்ள, திராவிடக் கருத்தியலில் ஈடுபாடு கொண்ட பள்ளி, கல்லூரி ஆசிரியர்களை இச்சங்கத்தில் இணைப்பது என்றும், சமத்துவம், சமூக நீதி உள்ளிட்ட கோட்பாடுகளை மாணவர்களிடமும், மக்களிடமும் பரப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அருள்மொழி உள்ளிட்ட எங்கள் மூவரையும் வழி நடத்துனர்களாக அமைப்பினர் ஏற்றுக் கொண்டனர்.

நூற்றுக்கும் குறைவான ஆசிரியர்களோடு தொடங்கப்பட்டிருக்கும் இச்சங்கம், அடுத்த ஆண்டு பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டு, ஒரு பெரிய மாநாட்டினை நடத்த வேண்டும் என்னும் விருப்பமும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ் இன, மொழி உரிமைகளை நிலைநாட்ட, சாதி - ஆணாதிக்கம் போன்ற ஒடுக்கு முறைகளுக்கு எதிரான சமத்துவத்தைப் பரப்ப, இச்சங்கம் இன்று முதல்அடியை எடுத்து வைத்திருக்கிறது. நீண்ட, நீளவிருக்கும் வரலாற்றின் முதல் அடி அது!

○

# பேரவைத் தலைவர் கலந்துகொண்ட மேற்கு மாவட்ட நிகழ்ச்சிகள்!

## சொந்தக்காலில் பெண்கள்






திராவிட நட்புக்கழகம் - ஷிரின் ஃபவுண்டேசன் இணைந்து தொழில் பயிற்சி பெற்ற 50 பெண்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வைச் 'சொந்தக்காலில் பெண்கள்' என்ற கருத்தரங்கம் 29-07-2024 அன்று கோவை - உக்கடம் தாஜ் டவர் அரங்கில் நடத்தின. நட்புக் கழகத் தலைவர் சிங்கராயர் தலைமையில், ஷிரின் ஃபவுண்டேசன் நிறுவனர் கோவை ஜிஎம்ஆர் வரவேற்புரையோடு நிகழ்வு தொடங்கியது.

நிகழ்வில், "சொந்தக்காலில் பெண்கள்" என்ற தலைப்பில் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு, துணைப் பொதுச்செயலாளர் காசு.நாகராசன், வி.பி.கோவிந்தராசு, கோவை மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் மீனா லோகு, தெய்வயானை மற்றும் மாநகராட்சி கல்விக் குழுத்தலைவர் நா.மாலதி, ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் ஆவை கோபிநாத், பொருளாளர் ஆர்மி சக்தி, மணியரசன், பாடகர் கண்ணையா உள்ளிட்ட பேரவைத் தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

## முகில்நிலா இல்லத் திருமணம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திருப்பூர் மாவட்டத் தோழர் முகில்நிலா மணிகண்டன்- செயபாரதி இணையரின் மகன் முகிலன், உடுமலை ஜஹான் ஆரா ஆகியோரின் ஜாதி, மத, சடங்கு மறுப்புச் சுயமரியாதைத் திருமணம் சூலை 28-07-2024 அன்று பல்லடத்தில் நடைபெற்றது.

பேரவையின் பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு தலைமையில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் மணமக்களுக்கு உறுதிமொழியைக் கூறி மணவிழாவை நடத்திவைத்தார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, எழுத்தாளர் பாமரன் ஆகியோர் மணவிழா உரையாற்றினார். உடன் பேரவைத் துணைத் தலைவர் சிங்கராயர், துணைப் பொதுச்செயலாளர் காசு நாகராசன், பல்லடம் இளங்கோவன், சூலூர் தேவராஜ், வி.பி. கோவிந்தராஜ், கோவை மாவட்டச் செயலாளர் ஆவை கோபிநாத், திருப்பூர் மாவட்டச் செயலாளர் பிரகாசு, கோவை திருப்பூர் மாவட்டங்களின் பேரவைப் பொறுப்பாளர்கள் தோழர்கள் பங்கேற்றனர்.

## வெள்ளோடு பொதுக் கூட்டம்



ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் " ஹாட்ரிக் ஸ்டாலின் ஹாட்ரிக் திராவிடமாடல்... " என்ற தலைப்பில் 29-07-2024 அன்று மாலை நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். ஈரோடு மாவட்டச் செயலாளர் தோழர் சரவணப் பெருமாள் தலைமைதாங்க, பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு, துணைத் தலைவர் சிங்கராயர், துணைப் பொதுச்செயலாளர் காசு. நாகராசன், கோவை மாவட்டச் செயலாளர் ஆவை கோபிநாத், திமுக சார்பில் சென்னிமலை ஒன்றியச் செயலாளர் பி செங்கோட்டையன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் காயத்ரி இளங்கோ, ஊராட்சித் தலைவர்கள் இளங்கோ, ரேணுகாதேவி, சதீஷ் மற்றும் குட்டப்பாளையம் குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தோழர் ஜாபர் அலி, சுயமரியாதைக் கழகம் கொடுமுடி பாண்டியன், பேரவைப் பொறுப்பாளர்கள் அர்ச்சுனன், துரை, தமிழ்மணி, இரமேசு, ஆதி, கோகுல், உள்ளிட்டத் தோழர்கள் பங்கேற்றனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

## ‘வயநாடு அரசியல் அல்ல, துயரம்!

கேரளாவின் வயநாடு பகுதியில் மண்சரிவால் நிகழ்ந்துள்ள பேரிடரின் கொடுமையைத் தொலைக் காட்சியில் பார்ப்பவர்கள் நெஞ்சம் பதறாமல் இருக்க முடியாது.

அடுத்தநாளே மக்களவையில் இதுகுறித்துப் பேசிய எதிர்கட்சியினர் உடனடியாக முதல்கட்ட நிவாரணமாக ரூபாய் 5,000 கோடி கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இதையெல்லாம் கேட்டுவிட்டு அமித்ஷா, கனமழை மற்றும் பேரிடர் குறித்து ஒரு வாரத்திற்கு முன்னரே அறிவித்தும் கூட, கேரள அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

எதை எப்போது பேசவேண்டும் என்பது ஒரு நாட்டின் உள்துறை அமைச்சருக்குத் தெரியாதா?

270 இக்கு மேலும் உயிரற்ற உடல்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டு இருக்கிறது. வாழ்வா சாவா என்று மக்கள் போராடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், வயநாடு துயரத்தை அரசியல்படுத்திப் பேசவேண்டாம் என அமைதியாக அமித்ஷாவை மறுத்திருக்கிறார் கேரள முதல்வர் பினராய் விஜயன்.

தமிழ்நாட்டில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பெரும் பேரிடர் பாதிப்புக்காக தமிழகம் ரூபாய் 37,907. 21 கோடி நிவாரணத் தொகை கேட்டும் வெறும் 276.10 கோடி மட்டுமே ஒன்றிய அரசு விடுவித்தது.

இது போல கேரளப் பேரிடர் நிவாரண நிதியை இழுத்தடிக்காமல்உரிய காலத்திற்குள், கேரள அரசு கேட்கும் பேரிடர் நிவாரண நிதியைக் கொடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் ஒன்றிய அரசுக்கு இருப்பதோடு, பிற அத்தியாவசிய உதவிகளையும் தாமதமின்றிச் செய்து தரவேண்டும்.

அரசுக்கும் மக்களுக்குமான ஒப்பந்தத்தை அரசு மீறக்கூடாது. மீறினால் அந்த அரசு அங்கே இருக்கக்கூடாது என்று ’சமுதாய ஒப்பந்த’ த்தில் சொல்கிறார் ரூசோ.

இதையும் கவனத்தில் எடுத்துக். கொள்ளட்டும், ஒன்றிய அரசு!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## காளப்பட்டியில் தோழருக்கு ஆறுதல்



கோவை மாநகர் மாவட்டத் தலைவர் தோழர் காளப்பட்டி ஜெயப்பிரகாசின் தந்தை சிவசாமி கடந்த மாதம் உடல்நலக்குறைவால் மரணமடைந்தார். கோவை மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது காளப்பட்டி சென்று ஜெயப்பிரகாசு குடும்பத்தினரிடம் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள், துயரத்தைப் பகிர்ந்து கொண்டு, ஆறுதல் கூறினார். பேரவைப் பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு முதலமைச்சரிடம் பாடம் படிக்க வேண்டும்!

**மதிவாணன்**

விடியற்காலை நேரம், பெருஞ் சத்தம் கேட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். சற்று நேரத்திற் கெல்லாம் சேற்றுமண் தங்கள் வீடுகளை சூழ்வதை உணர்ந்து உயிரைக் காத்துக்கொள்ள வெளியேற முயன்றனர். ஆனால் வெளியேற முடியாமல் மண்சரிவில் மாட்டி அம்மண்ணில் மூழ்கிப் போனார்கள். கேட்கும்போதே நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் இந்த நிகழ்வு கேரளாவின் வயநாட்டில் ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவில் இதுவரை 300க்கும் மேற்பட்டோர் இறந்ததாகவும், 191 பேர்கள் பற்றிய தகவல் இதுவரை இல்லை என்றும் கூறப்படுகின்றது. இறந்தவர்களில் 10 பேர் தமிழர்கள். முழு இழப்புகள் குறித்து, இனிவரும் நாள்களில் கணக்கிடும் போது, இது 2018 இல் நடைபெற்றதை விடவும் மோசமான நிகழ்வாகக் கணக்கிடப்படக் கூடும். கேரள முதலமைச்சர் ஊடகங்களுக்கு விளக்கம் கொடுக்கும் போது, முழுப் பகுதியும் மண்சரிவில் மூழ்கிவிட்டதைத் தெரிவித்துள்ளார்.

சிலநாள்களாகப் பெய்துவந்த கனமழையின் விளைவாக வயநாடு மாவட்டத்தைச் சார்ந்த முண்டக்கை, சூரல் மலை, அட்டமலை பகுதிகளில் இம்மண்சரிவு ஏற்பட்டுள்ளது. நள்ளிரவில் 1 மணியளவில் ஏற்படத் தொடங்கிய மண்சரிவு அடுத்தடுத்து 3 முறை நிகழ்ந்துள்ளது. மக்கள் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், விடியற்காலை 4 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவு மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடனடியாகக் கேரள முதல்வரைத் தொடர்பு கொண்டு இந்தத் துயர நிகழ்வு குறித்துக் கேட்டறிந்து அத்துடன் உடனடியாக 5 கோடி ரூபாய் பேரிடருக்கு உதவித்தொகையாக கொடுத்துள்ளார். மேலும் 20 பேர் கொண்ட பேரிடர் மீட்புக் குழு, 20 தீயணைப்புத்துறையினர், 10 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோரை 2 ஐ.ஏ.ஸ் பொறுப்பாளர்கள் கே.கே. சமீரன், ஜான் டாம் வர்கீஸ் இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனுப்பியுள்ளார்.

ஒரு மாநில அரசு அண்டை மாநிலத்தில் ஏற்பட்ட பேரிடரில், அந்த மாநில அரசுடன் தோளோடு தோள் நிற்கும் இத்தகைய தோழமை



நிகழ்வு இதற்குமுன் நடந்ததாக இல்லை என்றே சொல்லலாம். தனக்குத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு இல்லாத மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு, பேரிடர் தொகை ஆகியவற்றை வழங்காமல் வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் எந்தத் தாமதமும் இல்லாமல், உடனடியாக, அதுவும் தாமே முன்வந்து நிதியளித்த தமிழ்நாடு முதலமைச்சரைப் பார்த்துப் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் ஒன்றிய அரசு.

கேரள மாநில முதலமைச்சர் கூறுகையில் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து இதுவரை 1,600 பேர் மீட்கப் பட்டுள்ளனர். 8000 பேர் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர். 82 முகாம்கள் மக்கள் தங்குவதற்கு ஏதுவாக அமைப்பட்டுள்ளன. 1,167 மீட்புப் பணியாளர்கள் இந்தப் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். 99 மருத்துவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை அளித்து வருகிறார்கள். மேலும் 166 உடல்கள் உடற்கூறாய்வு செய்யப்படுள்ளது. 96 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று நிலைமையை விளக்கிக் கூறியிருக்கிறார்.

நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவரும் வயநாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி மக்களவையில் தன் ஆழ்ந்த இரங்கலையும், வலியையும் பதிவு செய்ததோடு, வயநாடுக்கு நேரில் சென்றுள்ளார் ராகுல்காந்தி, சகோதரி பிரியங்காவுடன். மேலும் ஒன்றிய அரசு உடனடியாக அனைத்து உதவிகளையும் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வயநாட்டின் வலி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நம் முதல்வர் கரம் நீட்டி உள்ளார். நாம் துணையாக நிற்போம், ஆறுதல் கூறி. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian